## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
## &
## இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## கோயமுத்தூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை
## (09.10 2021 முதல் 13.10.2021 )

**அறிக்கை எண் 81/2021** **தேதி. 08 10..2021**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 26°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 27°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (03.10.2021 முதல் 07.10.2021) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு - 13.10.2021- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 03/10 | 04/10 | 05/10 | 06/10 | 07/10 | தேதி | நாள் -1 09/10 | நாள்-2 10/10 | நாள்-3 11/10 | நாள்-4 12/10 | நாள்-5 13/10 |
| 16.8 | 7.7 | 6.0 | 15.2 | 3.7 | மழை (மி.மீ) | 5 | 5 | 20 | 20 | 30 |
| 33 | 32 | 33 | 32 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 32 | 32 | 32 | 30 | 29 |
| 23 | 24 | 23 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 22 | 22 | 21 | 21 |
| 7 | 7 | 7 | 7 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 90 | 83 | 88 | 96 | 74 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 95 | 95 | 95 | 95 | 95 |
| 60 | 70 | 69 | 67 | 59 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 60 | 60 | 60 | 60 | 65 |
| 7 | 8 | 13 | 13 | 12 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 12 | 12 | 12 | 12 | 12 |
| 50 | 230 | 230 | 230 | 230 | காற்று வீசும் திசை | 230 | 230 | 230 | 230 | 230 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (09.10. 2021 முதல் 13.10. 2021)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேக மூட்டத்துடன் காணப்படும். மேகமூட்டமான வானிலையுடன் இலேசானது முதல் மிதமான மழை பொழிய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 29°செ முதல் 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21°செ முதல் 22°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 95 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60 முதல் 65சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 12 கி.மீ

**வேளாண் அறிவுரை**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடையை தள்ளி போட வேண்டும். மருந்து தெளிப்பதையும் நீர்பாய்ச்சுவதையும் ஒத்திவைக்க வேண்டும்.<br>தற்போது பெய்துள்ள மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி மானாவாரி நிலங்களில் விதைப்பு மற்றும் இடைவெளி நிரப்புதல் வேலையை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.<br>காற்றின் வேகம் மணிக்கு 12 கிமீ அளவில் காணப்படுவதால் கரும்பு மற்றும் வாழைக்கு போதிய முட்டு கொடுக்க வேண்டும். |
| **நெல்** | **தூர்கட்டும் பருவம்** | தற்போது நடவு செய்துள்ள சம்பா நெற்பயிருக்கு போதிய வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும். |
| **பயறு வகைகள்** | **வளர்** பருவம். | இறவையில் விதைக்கப்பட்ட பச்சைப்பயறு மற்றும் உளுந்து பயிர்களில் மண்ணிலுள்ள அதிக ஈரத்தன்மையால் கிளைகள் வளர வாய்ப்புள்ளது. கிளைகளை வெட்டிவிட வேண்டும். |
| நிலக்கடலை | அறுவடை | மழை எதிர்பார்க்கப்படுவதால் நிலக்கடலை பயிரை அறுவடை செய்து உலர் கருவி மூலம் காயவைக்க வேண்டும். |
| கரும்பு | வளர் பருவம். | மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் கரும்பு பயிர் சாயாமல் தவிர்க்க தோகை உரித்து விட்டம் கட்டுதல் வேண்டும். |
| பருத்தி | வளர் மற்றும் பூக்கும் பருவம். | தொடர் மழையால் பருத்தியில் பூ அல்லது பூ மொட்டுகள் உதிர்வதை தடுக்க நாப்தலின் அசிடிக் அமிலம் 40 மில்லி கிராமை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.. |
| திராட்சை | | திராட்சை பயிரில், அதிக காற்றின் ஈரப்பதம் நிலவுவதால் பூஞ்சாண நோய்க்கு சாதகமான வெப்பநிலையால், அடிச்சாம்பல் நோய் வருவதற்கு வாய்ப்புள்ளது. எனவே காப்பர் ஆக்ஸி குளோரைடு மருந்து 0.25 சதவீதத்தினை 15 நாட்கள் இடைவெளியில் இருமுறை தெளிக்க வேண்டும். |
| தென்னை | | எதிர் பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி தென்னை மரத்தினை சுற்றியுள்ள பாத்திகளை ஆழப்படுத்துவதன் மூலம் பருவகால மழை நீரினை வீணாகாமல் சேகரிக்க வேண்டும். |
| மஞ்சள் | வளர் பருவம். | வானம் அதிக மேகமூட்டத்துடனும், அதிக ஈரப்பதத்துடனும் காணப்படுவதால் மஞ்சளில் நுண்ணூட்டசத்து குறைபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இலை வழி உரமாக ஒரு ஏக்கருக்கு 150 கிராம் பெரஸ் சல்பேட், ஜிங்க் சல்பேட், போராக்ஸ் மற்றும் யூரியாவை 250 லிட்டர் நீரில் கலந்து 25 நாட்கள் இடைவெளியில் மழை இல்லாத நாட்களில் இருமுறை தெளிக்க வேண்டும். |
| மரவள்ளிக்கிழங்கு | | வரும் நாட்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால் ஜுலை மாதம் நடவு செய்யப்பட்ட இறவை மரவள்ளிக்கு மேலுரமாக எக்டருக்கு 45 கிலோ தழைசத்து மற்றும் 120 கிலோ சாம்பல் சத்து இட்டுமண் அணைக்க வேண்டும். |
| கால்நடைகள் | | மழை எதிர்பார்க்கப்படுவதால் கோழி மற்றும் மாட்டு கூடாரங்களில் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.. மேலும் தீவனம் நனையாமல் பாதுகாப்பாக எடுத்து வைக்க வேண்டும்.<br>தற்போதைய வானிலை கறவை மாடுகளில் மடிவீக்க நோய் உருவாக்கும் காரணிகளை அதிகப்படுத்தும் என்பதால் பால் கறப்பதற்கு முன்பும் கறந்த பின்பும், 1 சதவீத பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைசலைக் கொண்டு கழுவ வேண்டும்.<br>மழையால் முளைத்த புதிய புல்களை கால்நடைகள் சாப்பிடுவதால் குடற்புழு நீக்குவதற்கு மருந்து கொடுக்க வேண்டும்.. |

## குறுஞ்செய்தி

இடைவெளி நிரப்புதல் வேலையை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**<br>
**முதன்மைஅலுவலர் (GKMS)**<br>
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**<br>
**த.நா.வே.ப.கழகம், கோவை**